# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2016

# Marking Scheme

## 65 - பொறியியற் தொழினுட்பவியல்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

PAPERMASTER.LK

2.1.3 **வினாத்தாள் I - இற்கான விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**வினாத்தாள் I - புள்ளி வழங்கும் திட்டம்**

| வினா இலக்கம் | சரியான விடை | வினா இலக்கம் | சரியான விடை |
|---|---|---|---|
| 01. | 4 | 26. | 1 |
| 02. | 2 | 27. | 5 |
| 03. | 2 | 28. | 1 |
| 04. | 2 | 29. | 5 |
| 05. | 4 | 30. | 5 |
| 06. | 1 | 31. | 4 |
| 07. | 3 | 32. | 1 |
| 08. | 5 | 33. | 4 |
| 09. | 5 | 34. | 1 |
| 10. | 3 | 35. | 1 |
| 11. | 4 | 36. | 5 |
| 12. | 3 | 37. | 4 |
| 13. | 3 | 38. | 3 |
| 14. | 4 | 39. | 5 |
| 15. | 5 | 40. | 3 |
| 16. | All | 41. | 5 |
| 17. | 1 | 42. | 2 |
| 18. | 3 | 43. | 2 |
| 19. | All | 44. | 1 |
| 20. | 2 | 45. | 3 |
| 21. | 1 | 46. | 2 |
| 22. | 5 | 47. | 2 |
| 23. | 1 | 48. | 2 |
| 24. | 4 | 49. | 4 |
| 25. | All | 50. | 1 |

PAPERMASTER.LK

## 2.2.3 வினாத்தாள் II இற்கு எதிர்பார்க்கும் விடைகள் புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் பற்றிய அவதானிப்பு, முடிவு, ஆலோசனைகள்

| |
|---|
| ⋆ வினாத்தாள் II இற்கான விடைகள் வழங்கல் பற்றிய அவதானிப்பு வரைபு 2, 3, 4.1, 4.2, 4.3 துணையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. |

### பகுதி A - அமைப்புக் கட்டுரை

1. அடியில் ஓர் 16 mm விட்டமுள்ள துளையும் ஓர் ஆப்பும் உள்ள ஒரு மர ஆதாரத்தின் ஒரு சமவளவுத் தோற்றம் கீழே காணப்படுகின்றது. தரப்பட்டுள்ள பரிமாணங்களுக்கேற்ப மூன்றாங் கோண நிமிர்கோண எறிய முறையைப் பயன்படுத்தி வழங்கப்பட்டுள்ள நெய்யரி மீது முகப்பு நிலைப்படம் (அம்புக்குறி **A** இன் திசையில்), பக்க நிலைப்படம் (அம்புக்குறி **B** இன் திசையில்), கிடைப்படம் ஆகியவற்றை வரைக. நெய்யரியில் உள்ள ஒரு சிறிய சதுரம் 1 mm × 1 mm என எடுக்க. பயன்படுத்தப்பட வேண்டிய அளவிடை 1 : 1 ஆகும். எல்லாப் பரிமாணங்களும் மில்லிமீற்றரிலாகும். இத்தொழினுட்ப வரைதல் 2016.08.02 ஆந் தேதி சச்சிந்த கைத்தொழில் நிறுவகத்தின் திரு. குமாரினால் வரையப்பட்டு 2016.08.04 ஆந் தேதி செல்வி மல்லிகாவினால் செவ்வைபார்க்கப்பட்ட ET/65/02 இலக்க வரைதலெனக் கொண்டு தரவு அட்டவணையைப் பூர்த்திசெய்க (உரு அளவிடைக்கு **வரையப்படவில்லை**).




PAPERMASTER.LK

**1.** முன்னிலைப்படம், பக்கநிலைப்படம், கிடைப்படம் என்பவற்றை மூன்றாம் கோணமுறையில் வரைதல் (8 புள்ளிகள்)

மையப்புள்ளியை சரியாக குறித்தல் (2 புள்ளிகள்)

பரிமாணங்கள் சரியாக குறித்தல் (ஒரு தோற்றத்திற்கு 2 புள்ளிகள் வீதம் 6 புள்ளிகள்)

உரிய அளவுத்திட்டத்தில் வரைதல் (1:1) (3 புள்ளிகள்)

(தொழினுட்ப வரைதல் குறிப்புகளை எந்தவொரு மொழியிலும் வழங்க முடியும்.
1/2 புள்ளியோ தசம புள்ளியோ வழங்க வேண்டாம்)

| | |
|---|---|
| ● கிடைப்படம் | - 12 |
| ● முன்னிலைப்படம் | - 12 |
| ● பக்கநிலைப்படம் | - 11 |
| ● மூன்றாம்கோணம் | - 08 |
| ● மையப்புள்ளி | - 02 |
| ● அளவீடுகள் சரியாக காட்டப்பட்டிருத்தல் ஒரு படத்திற்கு இரு அளவீடுகள் வீதம் மூன்று படத்திற்கும் 02 × 3 | - 06 |
| ● அளவுத்திட்டம் 1:1 | - 03 |
| ● அட்டவணை | - 06 |
| மொத்தப் புள்ளிகள் | - 60 |




கிடைப்படம் (12)



பக்கநிலைத் தோற்றம் (11)




முகப்புத்தோற்றம் (12)

| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | | திகதி | பெயர் | சச்சிந்த கைத்தொழில் நிறுவனம் |
| | வரைந்தவர் | 02.08.2010 | திரு குமார | |
| | பரீட்சித்தவர் | 04.08.2010 | செல்வி மல்லிகா | |
| 1:1 | மர ஆதாரம் | | | ET/65/02 |

**(பரிமாணத் தளத்தை சரியாக இனங்காணாவிடின் 05 புள்ளிகளை குறைக்கவும்)**

PAPERMASTER.LK

**2.** உரு **X** ஆனது ஓர் உத்தேசித்த கிறிக்கெற் விளையாட்டரங்கின் ஒரு பரும்படிக் கிடைப்படத்தைக் காட்டுகின்றது. உரு **Y** ஆனது அதன் பிரதான காட்சிமாடத்தின் ஒரு குறுக்குவெட்டைக் காட்டுகின்றது.




உரு **X**




உரு **Y**

*P* - காட்சிமாடம் (pavilion)

*A-H* - பேரொளிக் கம்பங்கள் (flood light posts)

*I* - வீச்சுப் பகுதி (pitch)

(*a*) காட்சிமாடம் *P* இல் பார்வையாளர்கள் அமர்வதற்கான படிகள் இடம்பெறும் பிரிவை அமைப்பதற்குக் கணிப்புகளுக்கேற்ப $280\ m^3$ கொங்கிறீற்றுக் கனவளவு தேவைப்படுகின்றது. இதற்கு விதந்துரைக்கப்பட்ட கொங்கிறீற்றுக் கலவையின் விகிதம் $1:2:4$ ஆகும். $1\ m^3$ ஈரக் கொங்கிறீற்றைப் பெறுவதற்கு $1.5\ m^3$ உலர் பொருள் தேவை. பின்வரும் பொருள்களுக்குத் தேவைப்படும் கனவளவுகளைக் கன மீற்றரிற் கணிக்க.

தேவையான கொங்கிறீறின் கனவளவு $= 280\ m^3$

தேவையான உலர்பொருட்களின் கனவளவு $= 280 \times 1.5$

$= 420\ m^3$ (4)

விகிதத்திற்கேற்ப மொத்த கனவளவு $= 1+2+4$

$= 7$

ஒரு அலகிற்கான கனவளவு $= \dfrac{420}{7}$ (4)

$= 60\ m^3$

தேவையான மணலின் கனவளவு $= 60 \times 2$

$= 120\ m^3$ (4)

தேவையான கல்லின் கனவளவு $= 60 \times 4$ (2)

$= 240\ m^3$ (2)

**(இறுதிப் விடை மாத்திரம் இருப்பின் முழுப்புள்ளி வழங்கவும்)**

PAPERMASTER.LK

(*b*) விளையாட்டரங்கிற்குப் பகலில் 36 kWh மின்சக்தி தேவை. சூரிய கலப் படல்களைப் பயன்படுத்தி இதனை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நடைமுறைச் சூழ்நிலைகளில் ஒரு சூரிய கலப் படலின் திறன் 10% உம் இப்பிரதேசத்தில் நாளாந்தம் சராசரியாகக் கிடைக்கத்தக்க சூரிய சக்தி 6 kWh/m$^2$ உம் ஆகும். தேவையான மின்சக்தியை வழங்குவதற்குச் சூரிய கலப் படல்களின் எத்தனை சதுர மீற்றர் தேவை ?

பெறும் சூரிய சக்தியின் அளவு = 6 kWh/m$^2$

பெற்றுக்கொள்ளக்கூடிய மின்சக்தி = $6\ \text{kWh/m}^2 \times \frac{10}{100}$ (1)

= 0.6 kWh/m$^2$ (1)

தேவையான மின்சக்தியின் அளவு = 36 kWh

சூரிய கலப்படலையின் சதுர மீற்றர் அளவு

= $\frac{36\ \text{kWh}}{0.6\ \text{kWh/m}^2}$ (1)

= 60 m$^2$ (1)

(சுருக்குவதற்கு **01** புள்ளி)
(விடைக்கு **01** புள்ளி)

(*c*) இவ்விளையாட்டு மைதானத்தின் நடுவில் உள்ள வீச்சுப் பகுதி (*I*) ஆனது ஒரு செவ்வக வடிவத்தைக் கொண்டிருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. செவ்வக வடிவத்தின் ஒரு மூலையைக் குறிப்பதற்கு எளிதாகப் பயன்படுத்தத்தக்க **இரு** முறைகளைக் குறிப்பிடுக.

1. தியோடலைட் மூலம் (2)
2. பைதகரஸ் முறை (2)

   அல்லது 3 - 4 - 5, 6 - 8 - 10, 5 - 12 - 13 முறை
3. பொறியியல் மூலைமட்டம் (2)
4. மூலைமட்டச் சோடி (1) / மூலைமட்டம் (1)
5. செங்கோண முறை (2)

(ஒரு புள்ளி மாத்திரம் வழங்கவும்.)

(உச்சப்புள்ளிகள் 04)

(*d*) பேரொளிக் கம்பங்கள் நிலைக்குத்தானவை என்பதை நிச்சயப்படுத்துவதற்குப் பயன்படுத்தத்தக்க ஒரு சாதனத்தை/கருவியைக் குறிப்பிடுக.

(i) குண்டு நூல் / முழு நிலையம் / தியோடலைட் (2)

(ii) நீர்மட்டம் / மேசன் மட்டம் / லேசர் மட்டம (2)

PAPERMASTER.LK

e) இவ்விளையாட்டு மைதானத்திற்கு நீரை வழங்குவதற்கு ஒரு மேந்தலைத் தொட்டியையும் (overhead tank) அதிலிருந்து நீரைப் பங்கிட்டு வழங்குவதற்கு ஒரு குழாய்த் தொகுதியையும் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நீர்த் தொகுதியை வடிவமைக்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய விளையாட்டு மைதானத்திற்கான நீரின் பாய்ச்சல் வீதத்தை ஆளும் **இரு** காரணிகளைக் குறிப்பிடுக.

1 நீர் தலை (water head) (2)

2 வழங்கல் குழாயின் விட்டம் (pipe diameter) (2)

3 திடலின் மட்டத்தில் இருந்து நீர்த்தாங்கியின் உயரம் (2)

4 திருகுபிடிகளின் தொகை (நீர்வழிந்தோடும் அளவு) (2)

5 வழங்கல் குழாயின் நீளம் (2)

6 குழாய் பதார்த்தம் (உராய்வு) (2)

7 வளைவுகளின் எண்ணிக்கை (2)

8 காற்றுத் திறக்கும் வால்வு (Air relief) (2)

9 சிறியதாக்கும் T சந்தி (2)

**(உச்சப்புள்ளிகள் 04)**

(f) பார்வையாளர்கள் அமர்ந்து கிறிக்கெற்றைப் பார்ப்பதற்காக வசதிசெய்வதற்கு *J* இனால் காட்டப்படும் படிகள் அமைக்கப்படுதல் வேண்டும். படிகளின் உயரத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?

1. மனிதர்களது கால் பாதத்திலிருந்து முழங்கால் வரையான சாதாரண உயரம் (3)
   (பாதத்தை நிலத்தில் வைத்து அமர்ந்து கொள்வதற்காக)

2. முன்னால் அமர்ந்திருப்பவர்களின் தலைக்கு மேலால் விளையாட்டை பார்வையிடக்கூடியவாறு இருத்தல் (3)
   (மனிதன் அமர்ந்த பிறகு சாதாரண உயரம் )

(g) இரவில் விளையாடுவதற்காக வசதிசெய்வதற்கு 8 பேரொளிக் கம்பங்களைக் கொண்டிருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கம்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 kW வலு தேவை. இவற்றுக்கு மின்னை வழங்குவதற்கு ஒரு தீசல் மின் பிறப்பாக்கியைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) மின் பிறப்பாக்கி கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச (இழிவு)க் கொள்ளளவு யாது ?

| | | |
|---|---|---|
| ஒரு கம்பத்திற்கான வலு | = | 10 kW |
| கம்பங்களின் எண்ணிக்கை | = | 8 |
| இருக்கவேண்டிய குறைந்தபட்ச வலு | = | $8 \times 10$ (1) |
| | = | 80 kW (3) |

**(விடை மாத்திரம் எழுதியிருப்பின் முழுப்புள்ளிகளையும் வழங்கவும்)**

(ii) இம்மின் பிறப்பாக்கித் தொகுதியின் நம்பகத்தகவைக் (reliability) கூட்டுவதற்குக் கீழே குறிப்பிட்ட கட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய படிமுறை **ஒன்று** வீதம் எழுதுக.

(1) வடிவமைப்புக் கட்டம் (design stage) :

- பதில் மின்பிறப்பாக்கியொன்றைப் பயன்படுத்தல் (standby) (4)
- பாதுகாப்பான துணைப்பாகங்களைப் பயன்படுத்தல் (4)
- கொள்ளளவு கூடிய மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்தல் (4)
- தரம் கூடிய மின்பிறப்பாக்கியொன்றைப் பயன்படுத்தல் (4)

**(உச்சப்புள்ளிகள் 04)**

PAPERMASTER.LK

(2) செயற்பாட்டுக் கட்டம் (operation stage) :

- உரிய முறையில் பராமரித்தல் (4)
- தரம் கூடிய மேலதிக பாகங்களைப் பயன்படுத்தல் (4)
- சிறந்த தொழினுட்பவியலாளர் மற்றும் தரம் கூடிய பொருட்களைப் பயன்படுத்தல் (4)

**(உச்சப்புள்ளிகள் 04)**

(iii) இம்மின் பிறப்பாக்கியைத் தொழிற்படுத்தும்போது ஏற்படக்கூடிய **நான்கு** ஒன்றுக்கொன்று வேறுபட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு இடர்களை எழுதுக.

(1) மின் அதிர்ச்சி ஏற்படல் (3)

(2) சுழலும் பகுதிகளில் உராய்வு ஏற்படல் (3)

(3) எண்ணெய் போன்றவற்றில் சறுக்குதல் (3)

(4) கூடிய சத்தம் (3)

(5) அதிர்வு (vibration) (3)

(6) காலப்படும் வாயுக்கள் (emission gas) (3)

(7) அதிக வெப்பம் (3)

**(உச்சப்புள்ளிகள் 12)**

PAPERMASTER.LK

**3.** (*a*) (i) மட்பாண்டக் கைத்தொழிலில் வட்டத் தட்டுகளுக்குப் பதிலாகச் சதுரத் தட்டுகளை உற்பத்திசெய்தல் ஒரு திருப்பு முனையாகக் கருதப்படலாம். இதற்கு இட்டுச் செல்லும் தொழினுட்பவியற் காரணிகளைக் குறிப்பிடுக.

(1) உற்பத்தித் தொழினுட்பவியலுடன் தொடர்புபட்ட காரணி

வனைதற்சில்லுக்குப் பதிலாக (pot wheel) அச்சுரு(mould) பயன்படுத்தல் (4)

(2) பொருள் தொழினுட்பவியலுடன் தொடர்புபட்ட காரணி

களிக்குப் பதிலாக வேறு பொருட்கள் பயன்படுத்தல் (கயோலின்) (4)

**(4 × 2 = 08 புள்ளிகள்)**

(ii) ஒரு பற்றறியையும் ஒரு மோட்டரையும் மாத்திரம் பயன்படுத்தும் மின் வாகனங்கள் 'பூச்சியக் காலலைக் (zero emission)' கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்ற போதிலும் இது ஓர் உண்மையன்று. மேற்குறித்த கூற்றை நியாயப்படுத்துவதற்கு மின் வாகனங்களின் தினசரிப் பயன்பாட்டை அடிப்படையாய்க் கொண்டு **இரு** வாதங்களைக் குறிப்பிடுக.

1. வாகனத்தை மின்னினால் செலுத்தினாலும் பற்றறியை மீண்டும் மீள் ஏற்றம் செய்வதற்கு மின் அவசியம். இம் மின்னை உற்பத்தி செய்வதற்கு தகனச் செயல் முறை பயன்படுத்தப்படலாம். இதனால் கேடாகும் வாயுக்கள் காலப்படலாம். (4)
2. வாகனத்தைப் பராமரிக்க தேவைப்படும் பொருட்களால் கேடான பொருட்கள் உற்பத்தி செய்யப்படலாம். (4)
3. பற்றறி உற்பத்தி செய்யும்போது காலப்படும் பொருட்கள் (4)
4. பற்றறியை அகற்றும்போது கேடான பொருட்கள் காலப்படும் (4)

**(4 × 2 = 08 புள்ளிகள்)**

(*b*) (i) ஒரு பொறிச்சாலையின் பொறி இயக்குநர்களை எச்சரிப்பதற்கு ஓர் அறிவித்தற் பலகையில் காட்சிப்படுத்தப்படத்தக்க வாழ்க்கைக்கு இடர்களை ஏற்படுத்தக்கூடிய **இரு** விபத்துகளை எழுதுக.

1. மின்னதிர்ச்சி ஏற்படல்
2. இயந்திரங்களின் பாகங்களை இயக்குவதால் இடர்கள் ஏற்படும்
3. தீப்பற்றக்கூடிய பொருட்கள்
4. உற்பத்தியின் போது வெளியிடப்படும் அதியமுக்க வாயுக்கள்
5. நச்சுப் பொருட்கள்

} (4) + (4)

**(4 × 2 = 08 புள்ளிகள்)**

(ii) விபத்துகளைத் தடுப்பதற்கு உற்பத்திப் பொறித்தொகுதியை வடிவமைக்கும்போது மேற்கொள்ளப்படும் **இரு** முற்காப்புகளைக் குறிப்பிடுக.

1. மின்துண்டிப்பு ஆளி (safety switch) பயன்படுத்தப்படுதல்
2. பரிசையிடல் (shields) / மூடுதல்
3. சுயமாக இயங்கும் பாதுகாப்பு எச்சரிக்கைத் தொகுதியை அமைத்தல்
4. பாதுகாப்பு வலயங்களை அடையாளமிட்டுக் குறித்தல்
   இயந்திரத்தினுள் செயற்படுத்தல்
5. சிறந்த தரத்திலான மேலதிகப் பாகங்கள், பொருட்களைப் பயன்படுத்தல்
6. அமுக்க விடுவிப்பு வால்வைப் பயன்படுத்தல் (Pressure releef value)

} (4) + (4)

**(4 × 2 = 08 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

(iii) நீண்ட காலத்திற்கு ஒரு பொறிச்சாலையில் செயற்படுவதன் விளைவாக ஏற்படத்தக்க **இரு** தசைவன்கூட்டு (musculoskeletal) ஒழுங்கீனங்களைக் குறிப்பிட்டு, ஒவ்வொன்றையும் உண்டாக்கும் **ஒரு** காரணியைக் குறிப்பிடுக.

| ஒழுங்கீனம் | உண்டாகும் காரணி |
|---|---|
| 1. பாத வலி (4) | நீண்ட நேரம் நிற்றல் / பாரம் தூக்குதல் (4) |
| 2. முதுகு வலி (4) | முன்னோக்கி குனிந்து இருத்தல்/ பாரம் தூக்குதல் (4) |
| 3. தசை பிரளுதல் (4) | இயந்திரப் பகுதிகளைத் தூக்குதல் / தொடர்ச்சியாக வேலை செய்தல் (4) |

(தசை, வன்கூடு தொடர்பான சரியான விடைக்கு மாத்திரம் புள்ளி வழங்கவும்.) (மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடைகளுள் அதாவது இரண்டு நோய்களுக்கு 04× 2 புள்ளிகளும் அந்த நோய்க்குரிய காரணிகள் இரண்டு சரியாக இருப்பின் 04 × 2 புள்ளிகளை வழங்குக.)

(*c*) ஓர் ஓம்மானியைத் தரங்கணிக்கும்போது (calibration) கீழே உள்ள உருவிற் காணப்படும் ஏகபரிமாண வரைபு பெறப்பட்டது.




இந்த ஓம்மானியைப் பயன்படுத்துகையில் ஒரு தடை அளக்கப்பட்டபோது 50 Ω வாசிப்பு பெறப்பட்டது. தடையின் மெய்ப் பெறுமானம் யாது ?




$$\frac{x-0}{100-0} = \frac{50-20}{130-20} \quad (3)\ (3)$$

$$x = \frac{30 \times 100}{110} \quad (3)$$

$$= 27\ \Omega \quad (2) + (1)$$

(இறுதி விடை மட்டும் இருப்பின் மொத்தப் புள்ளிகளையும் வழங்குக.) **(12 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

4. (*a*) திரு. சச்சிந்த தனது தொழிற்சாலையில் 'EXP' என்னும் வணிகக்குறிப் பெயரின் கீழ் தொலைக்காட்சி அன்ரெனாக்களை உற்பத்திசெய்து விற்பதற்கான ஒரு வியாபாரத்தை மேற்கொள்கின்றார். அவருடைய முக்கிய வியாபாரம் நகரப் பிரதேசங்களிலாகும். இணையத் தொலைக்காட்சி போன்ற புதுத் தொழினுட்பவியல்கள் பிரசித்தி பெறுகின்றமையால் இப்பிரதேசங்களில் தொலைக்காட்சி அன்ரெனாக்களின் விற்பனை இப்போது குறைந்து கொண்டு வருகின்றது. எனினும் கிராமப் பிரதேசங்களில் தொலைக்காட்சி அன்ரெனாக்களின் விற்பனை இன்னும் அதிகரித்து வருகின்றது.

அவருடைய வியாபாரத்தில் அனுபவம்பெற்ற இருபது தொழிலாளர்கள் வேலைசெய்கின்றனர். அவர்களில் ஆறு தொழிலாளர்களுக்கு விற்பனைச் செயற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன. திரு. சச்சிந்த இத்தொழிலாளர்களிடம் மிகுந்த நம்பிக்கையை வைத்திருப்பதனால் விற்பனைகள் குறைவாக இருக்கும் மாதங்களில் விற்பனைகளிலான குறைவுகளுக்கான காரணங்கள் பற்றி விசாரிப்பதில்லை. திரு. சச்சிந்த தனது தொழிலாளர்களைத் தகுந்தவாறு வழிப்படுத்தி ஊக்குவித்து அவர்களுக்குக் கடமைகளையும் அதிகாரங்களையும் குறித்தொதுக்குவதன் மூலம் தனது வியாபாரத்தை மேற்கொள்கின்றார். விற்பனைத் தொழிலாளர்கள் பணத்தைச் சேர்ப்பதற்கும் எஞ்சியுள்ள இருப்புகளைத் தமது கட்டுக்காப்பில் வைத்திருப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. திரு. சச்சிந்த தனது வியாபாரத்திலிருந்து உழைக்க வேண்டிய இலாபம் தொடர்பாகத் தெளிவான எண்ணத்தைக் கொண்டிருப்பதில்லை.

மேற்குறித்த பிரித்தெடுத்த பகுதி தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) திரு. சச்சிந்த கொண்டுள்ள **இரு** தலைமைத்துவ இயல்புகளைக் குறிப்பிடுக.

முக்கியம்: பரீட்சாத்திகள் பந்தியை அடிப்படையாக கொண்டு விடையளிக்கவேண்டும்.

1. தமது தொழிலாளர்களை சரியாக வழிநடத்தல்
2. தமது தொழிலாளர்களை ஊக்குவித்தல்/செயல் நோக்குறுத்தல்.
3. வேலைகளையும் பொறுப்புக்களையும் பகிர்ந்தளித்தல்
4. தமது தொழிலாளர்களை நம்பிக்கை கொள்ளல்

**(02 x 2 = 04 புள்ளிகள்)**

(ii) திரு. சச்சிந்த தகுந்தவாறு பயிற்சி **பெறாத இரு** முகாமைப் பணிகளைக் குறிப்பிட்டு, அவர் தனது வியாபாரத்தைத் தகுந்தவாறு முகாமிப்பதற்கு மேற்கொள்ளத்தக்க **ஒவ்வொரு** நடவடிக்கையை எழுதுக.

| பணி | நடவடிக்கை |
|---|---|
| திட்டமிடல் | தனது வியாபாரத்திற்கு தேவையான திட்டம் ஒன்றை தயாரித்தல் |
| கட்டுப்படுத்தல் | கட்டுப்படுத்தல் முறையைத் தாபித்தல்/தீர்மானித்தல் |

**(2 வீதம் 04 புள்ளிகள் = 08 புள்ளிகள்)**

(iii) திரு. சச்சிந்தவின் வியாபாரம் தொடர்பாக ஒரு பலம், பலவீனம், வாய்ப்பு, ஓர் அச்சுறுத்தல் ஆகியவற்றை எழுதுக.

பலம் - அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் இருத்தல் / தொழிற்சாலைக்கு உரிமையாளராக இருத்தல்.

பலவீனம் - தொழிலாளர்களுக்கான கட்டுப்படுத்தல் உபாயங்களை உரிய முறையில் பயன்படுத்தாமை.
தொழிலாள்கள் மீது அதிக நம்பிக்கை கொண்டிருத்தல்.
நிதி முகைாமைத்துவம் பலவீனமடைதல்.
திரு சச்சிந்த சரியான முகாமைத்துவத்தையும் உபாயங்களையும் பயன்படுத்தாமை.
இலக்கு/திட்டமிடல் இல்லாமை.
இருப்புக்கட்டுப்பாட்டில் பலவீனம்.
இலபாம் தொடர்பான அறிவின்மை/விளங்காமை.

வாய்ப்பு - கிராமப்புரங்களில் தொலைக்காட்சி அன்டனாக்களின் விநியோகம் அதிகரித்திருக்கின்றமை.

அச்சுருத்தல் - நகரப்புறப் பிரதேசங்களில் வேறுபட்ட தொழினுட்பமுறைகள் பிரபல்யமடைதல்.
இணையம் மற்றும் தொலைக்காட்சி போன்ற நவீன தொழினுட்ப முறைகள் பிரபல்யமடைதல்.

**(02 x 4 = 08 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

(iv) திரு. சச்சிந்தவின் வியாபாரத்திற்கு ஒரு சந்தைப்படுத்தல் திட்டத்தை விருத்தி செய்வதன் மூலம் அவர் தனது வியாபாரத்தில் உள்ள சந்தைப்படுத்தற் பலவீனங்களை வெல்வதிலிருந்து பெறத்தக்க **இரு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

- விற்பனைக் குறிக்கோள் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளல் (ஏதாவது வருடத்தில் சந்தைப்படுத்தல் தொகையை எந்த அளவிற்கு விரிவுபடுத்த வேண்டும் என இலக்கொன்றை தீர்மானித்துக்கொள்ளல்).
- விற்பனை உபாய முறைகளை முன்னரே தீர்மானித்தல்.
- சரியான விநியோகக் கட்டுப்படுத்தல் உபாயங்களை அமைத்துக் கொள்ளல்.

**(02 x 2 = 04 புள்ளிகள்)**

(v) திரு. சச்சிந்தா தனது வாடிக்கையாளர்களை ஒழுக்கமுறையாகக் கையாள்வதற்குக் கவனஞ் செலுத்த வேண்டிய **இரு** காரணிகளைத் தருக.

- சிறந்த குணவியல்புகள் தரங்கள் கொண்ட பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.
- சரியான விலையை நிர்ணயித்தல்.
- வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் பற்றிய உண்மையான தகவல்களைக் கூறல்.
- வாடிக்கையாளர்களுக்கு தவறான விளங்கங்களை வழங்கி ஏமாற்றாது இருத்தல்.
- பொருட்களின் தரத்தை உயர்மட்டத்தில் பேணுதல்.

**(02 x 2 = 04 புள்ளிகள்)**

(*b*) (i) கீழே உள்ள அட்டவணை திரு. சச்சிந்தவின் வியாபாரத்தின் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைக் கேள்வியையும் வழங்கலையும் காட்டுகின்றது.

| விலை (ரு.) | கேள்வி (அலகுகள்) | வழங்கல் (அலகுகள்) |
|---|---|---|
| 1800 | 1000 | 200 |
| 2000 | 800 | 400 |
| 2200 | 600 | 600 |
| 2400 | 400 | 800 |
| 2600 | 200 | 1000 |

(1) எவ்விலையில் சந்தைச் சமநிலை ஏற்படலாம் ?

1. ரு. 2200/-

**(02 புள்ளிகள்)**

(2) அவ்விலையில் சந்தைச் சமநிலை ஏற்படுவதற்கான காரணம் யாது ?

2. ரு. 2200/- விலைமட்டத்தில் நுகர்வோர் கொள்வனவு செய்வதற்கும் விற்பனையாளர் அவ்விலைக்கு வழங்குவதற்கு உடன்படல்.

**(02 புள்ளிகள்)**

(ii) விற்கப்படும் 'EXP' அன்ரெனாக்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்குத் திரு. சச்சிந்தா மேற்கொள்ளத்தக்க **இரு** உத்திகளைக் (strategies) குறிப்பிடுக.

- பண்பு மேலும் மேம்படுத்தல்.
- பொருட்களின் குணவியல்பு / விற்பனை சலுகைகளை வழங்குதல் / தற்போதய விலையைக் குறைத்தல்.
- போட்டி விலையொன்றைத் தீர்மானித்தல் /விளம்பர உபாய முறைகளை விருத்தி செய்தல்
- புதிய உபாயமுறைகளை அறிமுகப்படுத்தல்/ அறிவூட்டல் / புதிய விளம்பர ஊடகங்களை (தொலைக்காட்சி) பயன்படுத்தல் / விற்பனைக் கழிவுகள் வழங்கல்.
- மேம்படுத்தல் நடவடிக்கைகளை விருத்தி செய்தல் (பரிசில்/வவுசர்/போட்டி).
- விற்பனை முகவர்களுக்கு வழங்கும் கழிவு பணத்தொகையை அதிகரித்தல்.
- சில்லரை வியாபாரிகளுடன் இரு சாராரும் இலபாகரமான உடன்படிக்கைகளை ஏற்படுத்தல்.
- பொதியிடல்களை கவரச்சிகரமாக மேற்கொள்ளல்.
- உற்பத்திப் பொருள்களை கவரச்சிகரமாக முடிப்புச் செய்தல்.
- உத்தரவாதக்காலத்தை நீடித்தல் / அறிமுகம் செய்தல்.
- விற்பனை ஊழியர்களைப் பயன்படுத்தி கூடுதலாக விற்பனை செய்வதற்கு முயற்சித்தல்.

**(02 x 2 = 04 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

(iii) **'EXP' அன்ரெனாக்களின் வழங்கல் தொடர்பாகத் தீர்மானிக்கும்போது திரு. சச்சிந்த கருத்திற் கொள்ள வேண்டிய இரு காரணிகளைக் குறிப்பிடுக.**

- பெருளின் விலை
- பொருளினால் கிடைக்கும் சார்பு இலாபம் / தேறிய இலாபம்
- உற்பத்திக்கிரயம் (மூலப்பொருள் விலை, தொழிலாளர் கூலி, பொதியிடல் விலை)
- தொழினுட்பம்
- உற்பத்திக்கொள்ளவு
- உற்பத்தி செய்யக்கூடிய வேறு போட்டிரீதியான பண்டங்கள் (சாதாரண மூலப்பொருள் / உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தல்)

**(02 x 02 = 04 புள்ளிகள்)**

(*c*) திரு. சச்சிந்த மேம்படுத்திய தொழினுட்பவியலுடன் 'EXP' தொலைக்காட்சி அன்ரெனாக்களை அல்லது 'PLX' அன்ரெனாக்களை உற்பத்தி செய்யத்தக்கவர். இவ்வுற்பத்திப் பொருள்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையிற் காணப்படுகின்றன.

| விவரணம் | EXP | PLX |
|---|---|---|
| நிலையான கிரயம் | ரூ. 90 000 | ரூ. 130 000 |
| அலகு விற்பனைக் கிரயம் | ரூ. 700 | ரூ. 1 000 |
| அலகு விற்பனை விலை | ரூ. 1 800 | ரூ. 2 200 |
| அலகு மாறுங் கிரயம் | ரூ. 600 | ரூ. 900 |
| எதிர்பார்க்கும் விற்பனை அலகுகளின் எண்ணிக்கை | 5 000 | 5 250 |

(i) அன்ரெனாக்களின் ஒவ்வொரு வகைக்கும் அலகிற்கான மொத்த இலாபத்தைக் (gross profit per unit) கணிக்க.

| | EXP | PLX |
|---|---|---|
| விற்பனை விலை | ரூ. 1800 | ரூ. 2200 |
| விற்பனைக் கிரயம் | (700) | (1000) |
| மொத்த இலாபம் | 1100 | 1200 |
| | (02 புள்ளிகள்) | (02புள்ளிகள்) |

**(04 புள்ளிகள்)**

**(கணித்தல் இல்லாவிடில் புள்ளி வழங்கப்பட மாட்டாது)**

(ii) மேற்குறித்த இரண்டு வகை அன்ரெனாக்களில் எது திரு. சச்சிந்தவிற்கு எதிர்பார்க்கும் உயர் விற்பனை வருமானத்தைத் தரும் என்பதைக் கணித்துக் காட்டுக.

**EXP இற்கான**

எதிர்பார்க்கும் வருமானம் = விற்பனை விலை × அலகுகளின் விலை

= $1800 \times 5000$

= ரூ. 9,000,000 **(04 புள்ளிகள்)**

(கணிக்கப்படாமல் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

(சூத்திரம் சமன்பாடு இல்லாமல் பெறுமானங்களை மாதிரியாகக் கொண்டிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.)

**PLX இற்கான**

எதிர்பார்க்கும் இலாபம் = ரூ. $2200 \times 5250$

= ரூ. 11,550,000 **(04 புள்ளிகள்)**

அதிக இலாபத்துடன் எதிர்பார்த்த விற்பனை வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பது PLX உற்பத்தி செய்வதால் ஆகும். **(02 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

(iii) கணிப்புப் படிமுறைகளைக் காட்டி, அன்ரெனாக்கள் ஒவ்வொன்றுக்கும் சமப்பாட்டுப் புள்ளியைக் (break-even point) கணிக்க.

**EXP இன்**

பங்களிப்பு = ஒரு அலகின் விற்பனை விலை - அலகு மாறும் கிரயம்
= 1800 - 600
= ரூ. 1200

(பங்களிப்பைக் காண்பது கட்டாயமில்லை)

இலாப சமப்பாட்டுப்புள்ளி = $\frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகின் பங்களிப்பு}}$

= $\frac{90,000}{1200}$

சரியான சமன்பாடும் பிரதியிடலும் **(02 புள்ளிகள்)**

= 75அலகுகள் (1) (1) **(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(இறுதி விடைக்கு “அலகு” எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளிகள் 02) (“அலகு” எனக் குறிப்பிடாவிடின் புள்ளி 01)

**PLX இன்**

பங்களிப்பு = 2200 - 900
= 1300

இலாப சமப்பாட்டுப்புள்ளி = $\frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகின் பங்களிப்பு}}$

= $\frac{130,000}{1300}$

= 100அலகுகள் (1) (1)

சரியான சமன்பாடும் பிரதியிடலும் **(02 புள்ளிகள்)**

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(இறுதி விடைக்கு “அலகு” எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளிகள் 02) “அலகு” எனக் குறிப்பிடாவிடின் புள்ளி 01)

(iv) இரண்டு வகைத் தொலைக்காட்சி அன்ரெனாக்களில் ஒரு வகை தொடர்பாகத் தீர்மானிப்பதில் எதிர்பார்க்கும் வருமானத்துக்கு மேலதிகமாகத் திரு. சச்சிந்த கருத்திற் கொள்ள வேண்டிய **இரு** நுண்சுற்றாடற் காரணிகளைப் பட்டியற்படுத்துக.

1. நிறுவனத்தின் கொள்கைகள்
2. திரு சச்சிந்தவின் போட்டியாளர்களின் நடத்தைகள்
3. விநியோகச் செலவு (சந்தைப்படுத்தல் சேவைகளின் கிரயம்)
4. வாடிக்கையாளர்களின் நடத்தைகள் (விருப்பம்)

**(02 x 2 = 04 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

5. (*a*) உருக்களில் தரப்பட்டுள்ள பாவுபடிகளையும் (lintels) முனைநெம்புக் கொங்கிறீற்றுக் கட்டமைப்பையும் அடிப்படையாய்க் கொண்ட பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.




(i) தளக் குறுக்குவெட்டுகள் *X* - *X* ஐயும் *Y* - *Y* ஐயும் வரைந்து, நொதுமல் (நடுநிலை) வலயங்களைக் காட்டுக. **(04 புள்ளிகள்)**







நொதுமல் (நடுநிலை வலயம் கிடையாக சரியாக நடுநிலை குறிக்கப்பட்டிருந்தால் முழுப்புள்ளி வழங்கவும்.)

(ii) மேற்குறித்த குறுக்குவெட்டுகள் ஒவ்வொன்றிலும் இழுவை வலயத்தையும் நெருக்கு வலயத்தையும் காட்டுக. **(08 புள்ளிகள்)**




(iii) குறுக்குவெட்டுகள் ஒவ்வொன்றிலும் மீளவலுவூட்டல்களின் அமைவுகளைக் காட்டுக. **(08 புள்ளிகள்)**




(கம்பிகளின் எண்ணிக்கை அவசியமில்லை)

(iv) மீளவலுவூட்டல்களின் முக்கியத்துவத்தை **இரு** காரணங்கள் தந்து விளக்குக. **(08 புள்ளிகள்)**

- கொங்கிறீற்றுக்களின் இழுவிசை (Tension) பலவீனமாகாமல் (நொருங்கும் சக்தி 1/4ஆகும்).
- வலுவூட்டல் மூலம் உறுதியடையச் செய்யலாம்.
- வலுவூட்டல் மூலம் குறைந்த செலவுடன் சிறிய கொங்கிறீற்று பகுதியை நிர்மாணிக்க முடியும்.
- கொய்வுத்தகைப்பிற்கு ஈடுகொடுப்பது வலுவூட்டல் மூலம் செயற்படுவதனால் தகைப்பிற்கு உடைவதை தவிரத்துக்கொள்ளலாம்.

**(04 x 2 = 08 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

(*b*) கொங்கிறீற்றுக்கான மீளவலுவூட்டல் வளைகளில் பயன்படுத்தப்படும் மேற்கவிவின் நீளத்திற் செல்வாக்குச் செலுத்தும் **இரு** காரணிகளை எழுதுக.

(08 புள்ளிகள்)

- சுமையினால் ஏற்படுகின்ற தகைப்பை ஒரு வலுவூட்டலில் இருந்து மற்றையவைக்கு உரிய முறையில் ஊடுகடத்துவதற்காக உரிய நீளம் தேவையாகும்.
- பயன்படுத்தப்படுகின்ற வலுவூட்டல் கம்பி வகைகளுக்கு ஏற்ப
- பயன்படுத்தப்படுகின்ற வலுவூட்டல் கம்பிகளின் விட்டத்திற்கு ஏற்ப

**(04 x 2 = 08 புள்ளிகள்)**

(*c*) முன்தகைத்த (pre-stressed) கொங்கிறீற்றைப் பயன்படுத்துவதன் **இரு** நன்மைகளை ஓர் உதாரணத்தைப் பயன்படுத்தி விவரிக்க.

(08 புள்ளிகள்)

- முன்தகைத்த கொங்கிறீற்று சாதாரண கொங்கிறீற்றை விட உறுதி கூடியதாகையால் சிறிய குறுக்குவெட்டு அளவை பயன்படுத்துவதால் மூலப்பொருட்களை மீதப்படுத்த முடியும்(குறைக்கலாம்).
- முன்தகைப்பு கொங்கிறீற்றுகளில் மாய்சுமை (dead load) குறைவதால் கீழே உள்ள கூறுகளுக்கு / கட்டமைப்புகளுக்கு செலவிடும் பொருட்களின் அளவை கட்டுப்படுத்திக்கொள்ள முடியும்.
- நிர்மாணிப்பின்போது சாரம் அமைப்பதற்கான செலவு குறையும்.
- வெடிப்புகள் ஏற்படுவது குறையும்.

(உதாரணம்: பாலம், புகையிரத தண்டவாளக் கட்டை கொங்கிறீற்று கதவுகள், தூண்கள், மின்கம்பங்கள்)

(*d*) (i) கொங்கிறீற்றை இடுகையில் இறுக்கற் (compaction) செயன்முறையின் முக்கியத்துவத்தை விளக்குக.

(08 புள்ளிகள்)

இறுக்கல் செயல்முறையினால்

- இறுக்கல் செயல்முறையினால் நீர்க்குமிழ்கள் வெளியேறும் (2)
  (தடிப்பு, உறுதி அதிகரிக்கும்) (6)
- நீர்க்குமிழ்கள் வெளியேறுவதனால் உப்புத்தன்மை கொண்ட நீராவி கொங்கிறீற்றுகளுக்கு உட்செல்வதனால் துருப்பிடித்தல் ஏற்படுவது குறைவாகும்.
- திரள் சீராகப் பரவுவதனால் உறுதி கூடும்.
  நீர்க்குமிழி வெளியேறுதல் என மாத்திரம் எழுதியிருப்பின் 02 புள்ளிகள்
  மொத்தம் 8 புள்ளிகள் **(உச்சப்புள்ளிகள் 8)**

(ii) மீயிறுக்கல் (over-compaction) எங்ஙனம் கொங்கிறீற்றின் தரத்தைப் பாதிக்கின்றதென விளக்குக.

- அதிகூடிய இறுக்கல் ஏற்படும் போது பிரிபாடும் (Segregation) சிறிய திறள்களும் பெரிய திறள்களும் வெவ்வேறாக நிலைப்படுவதனால் உறுதி குறைவாகும்.
- அதிகூடிய இறுக்கத்தின் போது கொங்கிறீற்று மேற்றளத்தின் மீது இருக்கும் நீருடன் சீமெந்து குழம்பு மேல் வருவதனால் உறுதி குறைவாகும்

**(உச்சப்புள்ளிகள் 8)**

(*e*) ஒரு சாதாரண கீல (strip) அத்திவாரத்தைப் பரும்படியாக வரைந்து, எவையேனும் **மூன்று** பகுதிகளைப் பெயரிடுக.

(08 புள்ளிகள்)

அத்திவாரத்தை வரைந்து ஏதாவது மூன்று பகுதிகளைக் குறித்தல். (படத்தைப் பார்க்க)

**(06 புள்ளிகள்)**

பட்டி அத்திவாரத்தின் நீளம் தூணிலிருந்து ஒரு பக்கத்திற்கு தொடரச்சியாக இருக்கும் கருத்தை எழுதுதல் or படம் மூலம் காட்டல்

**(02 புள்ளிகள்)**

PAPERMASTER.LK




(*f*) ஒரு தொழிலகத்திற்கு ஓர் இரட்டைக் கூரையை (double roof) அமைக்க வேண்டியுள்ளது.

(i) அக்கூரையை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் உதைகால்கள் (struts), தம்பங்கள் (posts) போன்றவற்றின் குறுக்குவெட்டுப் பரப்பளவுகளைத் துணிவதில் கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய காரணிகளை உதாரணங்களுடன் விவரிக்க. (10 புள்ளிகள்)

- கூரைமீது ஏற்படும் சுமை மற்றும் தாங்கி இடைத்தூரம் (span) கூடுவதனால் ஏற்படும் பல்வேறு தகைப்பு விசைகள்

  (உதாரணம்: சுமை: மாய்சுமை, சுற்றாடல் சுமை) தாங்கி இடைத்தூரத்தை தொடர்புபடுத்தி விபரித்தல்
- பொருட்களின் வெவ்வேறான உறுதி (அரி மரங்களைவிட உருக்கு சக்திவாய்ந்தது.)

(ஒரு விடயத்துக்கு 05 புள்ளிகள் வீதம் மொத்தம் 10 புள்ளிகள்)

(ii) தொழிலகத்தின் செயற்பாடுகள் விரிவடைந்திருப்பதனால் அக்கூரையின் அகல்வை (span) அதிகரிக்கச் செய்ய வேண்டியுள்ளது.

இங்கு பிரிசுவர்கள் அல்லது தூண்கள் பயன்படுத்தப்படாவிட்டால், கூரைக்கு ஏன் வெட்டுமரத்தைப் பயன்படுத்தல் பொருத்தமற்றதாக இருக்குமென விளக்குக. (10 புள்ளிகள்)

- தாங்கி இடைத்தூரம் பெரிதாக இருக்கும் போது சுமை அதிகரிப்பதனால் அவற்றை தாங்கிக்கொள்வதற்கு தேவையான உறுதி அரிமரத்தில் காணப்படுவதில்லை.
- அரிமரத்தில் ஏற்படக்கூடிய தொங்குநிலை அதிகமானதால் அரிமரம் பொருத்தமற்றது.

(ஒரு விடயத்துக்கு 05 புள்ளிகள் வீதம் மொத்தம் 10 புள்ளிகள்)

(iii) வெட்டுமரத்திற்குப் பதிலாகக் கூரைக் கட்டமைப்பிற்கு உகந்த **இரு** பொருள்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- உருக்கு (H, L இரும்பு, கல்வனைசுக் குழாய்)
- கொங்கிறீற்று வலுச்சட்டப்படல்

(ஒரு விடயத்துக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 2 புள்ளிகள்)

PAPERMASTER.LK

**6.** பல்வேறு மாசுகளினால் நீர் மாசுபடுத்தப்படும்போது அந்நீர் நுகர்ச்சிக்கு உகந்ததற்றதாகின்றது. நீரிலிருந்து அத்தகைய தீங்குபயக்கும் இரசாயனப் பொருள்களையும் ஏனைய பதார்த்தங்களையும் அகற்றும் செயன்முறை முக்கியமானது. இது நீரின் தூய்தாக்கல் எனப்படும். இச்செயன்முறையின் பின்னர் நீர் தேக்கத் தொட்டிகளுக்கு அனுப்பப்பட்டு, பங்கீட்டுக் குழாய்த் தொகுதிகளினூடாக நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகின்றது.

(*a*) நீரத் தூய்தாக்கலின் பிரதான படிமுறைகளை விவரிக்க. (10 புள்ளிகள்)

- அரிகழிவு
  - நீர்மூல முதல்களிலிருந்து (source) நீர் சுத்திகரிப்பிலுள் நீரை உட்செலுத்துவதற்கு முன் உள்ளெடுப்பிற்கு (intake) அண்மையில் அரி கழிவு நிகழும்
  - இதன் போது நீரில் மிதக்கும் அதிகளவு கனமான பொருட்கள் நீரிலிருந்து அகற்றப்படுகின்றன.
  - வடிவகைகள் ②
    - கரட்டு அரிதட்டு (coarse screen)
    - நடுத்தர அரிதட்டு (medium screen)
    - நுண்ணரிதட்டு (fine screen)
    - நுணுக்கு அரிதட்டு (micro screen) ②

- காற்றோட்டம் - இங்கு நீரிற்கு நன்கு காற்றோட்டம் கலப்பதற்கு இடமளிக்கின்றது. இங்கு நீரில் கரைந்துள்ள ஆவிப்பரப்புள்ள பொருட்கள் அகற்றப்படுகின்றன. (உதாரணம்: $H_2S, CO_2$ …..)

- திறளலும் அடையலும்
  - நீரில் உள்ள தொங்கல் துணிக்கைகள் கட்டிகளாக மாற்றுவதற்கு ②
  - திறளச் செய்வதற்கு நீருடன் திறளையைச் (coagulant) சேர்க்கும் போது துணிக்கைகள் பலவீனமடைகின்றது.
  - அதன் மூலம் குறுகிய நேரத்தில் நன்றாக நீருடன் கலக்கின்றது
  - அதன் பிறகு அடைவிற்கு உள்ளாகின்றது. ②

- வடிகட்டல் - இது மணல் வடிகட்டிகளின் மூலம் நடைபெறும். பரல் மீது பரப்பிய மணல் தட்டு வடிகட்டியாக பயன்படுத்தப்படுகின்றது ②

- தொற்று நீக்கல் - வடிகட்டிய நீரில் அடங்கியுள்ள நுண்ணங்கிகளை விசேடமாக பற்றீரியாவை அகற்றுதல்
  தொட்டு நீக்கல் மூலம் குளோரின் மூலம் நடைபெறும்.

ஒரு படிமுறைக்கு **1** புள்ளி
விபரத்திற்கு **1** புள்ளி } **05** படிமுறைகளுக்கு
மொத்தம் **10** புள்ளிகள்

PAPERMASTER.LK

(*b*) நீர் வழங்கல் தொகுதிகளினதும் கழிபொருள் அகற்றல் தொகுதிகளினதும் பின்வரும் கூறுகளினால் செய்யப்படும் அடிப்படைத் தொழில்களைக் குறிப்பிடுக.
(i) திருகுபிடிகள்
(ii) வால்வுகள்
(iii) நீரப் பொறி
(iv) அழுக்குத் தொட்டி
(v) ஆட்பிலம்
(15 புள்ளிகள்)

(i) திருகு பிடி - பயன்படுத்தப்படுகின்ற நீர் வழங்கலைக் கட்டுப்படுத்தல்
நீர் வழங்கல் தொகுதிக்கு நீரை வழங்குதல்

(ii) வால்வு - நீர் செல்வதைக் குறைப்பதும் கூட்டுவதுமாகும்
இயல்பாக நீர் வழங்குவதை நிறுத்துதல்
பூரணமாக மூடி நீர் செல்வதை தடுக்கலாம்
குழாயுள் உள்ள வாயுக்களை அகற்றல்

(iii) நீர் பொறி - கழிவறை குந்திச்சட்டியின் அடியில் நீரை தேக்கிவைத்துக்கொள்ளல்
அசுத்தமான வாயுக்கள் குழாயூடாக வருவதைத் தடுத்தல்
அங்கிகள் குழாயூடாக வருவதைத் தடுத்தல்
அழுக்குகள் / துணிக்கைகள் மணல் பிரதான குழாயினுள் செல்வதை தடுத்தல்

(iv) அழுக்கத்தொட்டி - கழிவுகள் பாதகமில்லாத மட்டத்திற்கு மக்காக படிய விடல்

(v) ஆட்பிலம் - குழாய்வழி அடையாமல் பாதுகாக்கின்றது
அடைந்த குழாய்வழிகளை சுத்தம் செய்யலாம்
குழாய்த் திசையைத் திருப்புதல் / கிளைகளை இணைத்தல்
குழாய்த் தொகுதியை பராமரிப்பதற்கு இலகுவானது

- சாய்வான இடங்களிலே இழுவிசையைப் பேணிக்கொள்வதற்கு

**(ஒரு விடயத்துக்கு 03 புள்ளிகள் வீதம் 15 புள்ளிகள்)**

(*c*) நீரதைப்பு (water hammer) உருவாகும் விதத்தை விவரிக்க. (10 புள்ளிகள்)

குழாயினுள் பாய்ம அசைவின் போது திடீரென அவ்வசைவு நிற்கும் போது அல்லது அவ்வசைவுத் திசை மாறுவதன் காரணமாக ஏற்படுகின்ற எழுச்சி காரணமாக பொங்கலினால் (surge) நீர் அதைப்பு ஏற்படும்.

அசைந்து கொண்டிருக்கின்ற நீர்த்திணிவின் (mass) வேகத்தை மாற்றுவதற்காக திணிவு ஆர்முடுகல் அல்லது அமர்முடுகலிற்கு உள்ளாக்கப்பட்டு சக்தியொன்று உருவாகின்றது. இதன் மூலம் அமுக்க அலை (pressure wave) ஏற்படுகின்றது.
உதாரணம்: நீர் வழங்கல் தொகுதியொன்றின் முனையில் உள்ள வால்வை ஒரே முறையில் மூடுவதனால் ஏற்படும் அமுக்க அலை குழாயினூடாக செல்லுதல்.

**(உச்சப்புள்ளிகள் 10)**

PAPERMASTER.LK

(*d*) ஒரு குழாய் வலையமைப்பைப் பயன்படுத்தி நீரை விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசத்திற்கு ஒரு மட்டமாக்கல் உபகரணத் தானத்தை மாத்திரம் பயன்படுத்தி ஒரு மட்டமாக்கற் பணியிற் பெறப்பட்ட மட்ட வாசிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| மட்டமாக்கல் தானம் | வாசிப்பு (m) | விவரணம் |
|---|---|---|
| 1 | 2.5 | A |
| 2 | 1.4 | B |
| 3 | 0.5 | C |
| 4 | 3.0 | D |
| 5 | 1.8 | E |
| 6 | 0.7 | F |

(i) மட்டமாக்கல் தானம் A இன் மாற்றிய மட்டம் 100 m எனின், ஏற்ற இறக்க முறையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அட்டவணையைப் பயன்படுத்தி மற்றைய தானங்கள் ஒவ்வொன்றினதும் மாற்றிய மட்டத்தைக் கணிக்க. **(40 புள்ளிகள்)**

| மட்டத் தானம் | B.S. | I.S. | F.S. | Rise | Fall | R.L. | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2.5 | | | | | 100.00 | A |
| 2 | | 1.4 | | 1.1 | | 101.1 | B |
| 3 | | 0.5 | | 0.9 | | 102.0 | C |
| 4 | | 3.0 | | | 2.5 | 99.5 | D |
| 5 | | 1.8 | | 1.2 | | 100.7 | E |
| 6 | | | 0.7 | 1.1 | | 101.8 | F |
| | 2.5 | | 0.7 | 4.3 | | (100.0) | |
| | (0.7) | | | (2.5) | 2.5 | 1.8 | |
| | 1.8 | | | 1.8 | | | |

(சரியான தரவுக்கு 02 வீதம் மொத்தம் 34)

(மாற்றிய மட்டம் மட்டும் இருப்பின் புள்ளி இல்லை)

06

40

(ii) மட்டமாக்கற் செயன்முறையில் ஏற்படத்தக்க **மூன்று** வழுக்களை விவரிக்க. **(09 புள்ளிகள்)**

- உபகரணத்தின் அல்லது கருவியின் வழு
- தரவு படுத்தும்போது ஏற்படும் வழு
- தரவுகளை வாசிக்கும் போது ஏற்படும் வழு
